The Journal of
THE TANJORE SARASVATI MAHAL LIBRARY

EDITED BY

S. GOPALAN, B. A., B. L.,

Honorary Secretary,

T. M. S. S. M. Library, Tanjore.

Vol. XVI **No. 1**

PUBLISHED WITH THE PERMISSION OF
THE ADMINISTRATIVE COMMITTEE OF THE LIBRARY.

A. C. 1962. Śaka 1884.

Annual Subscription Rs. 4.

CONTENTS

No.		Pages.
1.	Editorial	
2	Dharmarājādhwarin — Sri S Jagadīśan, M. A.,	1—5
3.	தஞ்சை வெள்ளைப் பிள்ளையார் குறவஞ்சி — வித்துவான் திரு வீ. சொக்கலிங்கம்.	1—16
4.	निघण्टुसमुच्चयः — Sri P. V. Varadarāja Śarma, M. A.,	33—44
5	मुद्राराक्षस नाटक (सार) प्रतापसिंह राजा विरचित — Sri S. Gaṇapathi Rao	9—20
6.	नवग्रहचरितं नाम नाटकम्-घनश्यामकविविरचितम् — Sri S Jagadīśan, M A., and Sri V. Sundara Śarma	5—16
7.	தன்வந்தரி வைத்யம் (இரண்டாம் பாகம்) — Dr. S. Veṅkaṭarājan, L. I. M.,	201—216
8.	वैयाकरणसिद्धान्तकौमुदी-भट्टोजीदीक्षितकृता An Analysis in English by late Sri P. V. Nāganātha Śāstri (continued from Vol. XV. No. 3.) —Sri N. S. Dēvanāthāchāriar	187—193
9.	आपस्तम्बस्मार्तप्रयोगः —Sri S. Sundarēśa Śāstri and Sri V. Sundara Śarma	33—44
10.	தன்வந்தரி வைத்யம் (முதல் பாகம்) (முன்னுரை, விஷய அட்டவணை முதலியன) —Dr. S. Veṅkaṭarājan, L. I. M.,	1+1+2+18
11.	(1) आदित्यहृदयस्तोत्रव्याख्या (2) आदित्यस्तोत्ररत्नं (सव्याख्यं) च —Sri N. V. Veṅkaṭaśubramaṇya Śāstri	2+1—38-2=38
12.	Our Exchanges	1—2

THE JOURNAL OF
THE TANJORE SARASVATI MAHAL LIBRARY

Vol. XVI A. C. 1962 Śaka 1884 No. 1

EDITORIAL

In this issue we have published two complete works in Sanskrit, a new serial in Tamil and an article on Dharmarajadhwarin, the philosopher and logician at Tanjore during the 16th century. The Sanskrit works are entitled Adityahrdaya Stotra Vyakya and Adityastotraratnam with commentary in Sanskrit. The latter is one of the works by the famous Appayya Dikshita of seventeenth century.

The Tamil new serial is entitled 'வெள்ளைப்பிள்ளையார் குறவஞ்சி' a poem sung by the people of 'Kuravar' caste, praising the 'வெள்ளைப்பிள்ளையார்' in the east gate at Tanjore.

Besides the above articles and the serial, the other serials which appeared in the previous issues are continued. It will be noticed that the first part of 'Dhanvantari Vaidyam' serialaised in the previous issues is completed in this issue.

We have no doubt that the contents of this issue will be found useful by the learned public.

S. GOPALAN,
Editor.

Statement about ownership and other particulars about newspaper 'JOURNAL OF THE TANJORE SARASVATI MAHAL LIBRARY' to be published in the first issue every year after the last day of February.

FORM IV.

(See Rule 8)

1. Place of Publication	Tanjore.
2. Periodicity of its publication	Three issues in a year.
3. Printer's Name	Sri S. N. Panchanada Iyer.
Nationality	Indian.
Address	Managing Director, Sri Vani Vilas Syndicate Ltd., SRIRANGAM, Tiruchirapalli-6.
4. Publisher's Name	Sri S. Gopalan.
Nationality	Indian.
Address	Honorary Secretary, T. M. S. S. M. Library, Tanjore.
5. Editor's Name	Sri S. Gopalan.
Nationality	Indian.
Address	Honorary Secretary, T. M. S. S. M. Library, Tanjore.
6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital.	The Administrative Committee of the T. M. S. S. M. Library, Tanjore.

I, S. Gopalan. hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date: 22—3—1962.

S. GOPALAN,
Signature of Publisher.

DHARMARĀJĀDHWARIN

By

S. JAGADĪŚAN, M. A.,

(Research Pandit, Saraswathi Mahal Library, Tanjore)

It is very rare to find in the vast literature of Advaita Vedānta, the language of Nyāya, while explaining the Advaita theory of knowledge. There is no doubt, that other works on the Advaita Vedānta as Śrī Harṣa's Khaṇḍanakhaṇḍanakhādya, Citsukha's works, Madhusūdana Sarasvati's Advaita Siddhi, discuss logical problems with great skill and dialectical power but it is not their intention to give a systamatic exposition of Advaita epistemology. Dharmarājādhwarin is one among the very few authors who, while accepting the conclusion of the Advaitins, found it necessary to use the language of the Nyāya system by the special circumstances of their time and society in which they lived. My humble attempt in this paper is to give a short sketch of Dharmarājādhwarin, the notable writer of the sixteenth century, and his works.

Dharmarāja was a native of Khaṇḍaramanikkam Village, Tanjore District, in South India. His nativity is known from the beginning and also from the colophon of his works

तत्र कण्डरमाणिक्य ग्रामस्थनिवासिना ।
मणिप्रकाशविवृतिः धर्मराजेन [1]तन्यते ॥ १ ॥

नानाटीकोक्तयुक्तीनामुन्नीतानाञ्च संग्रहः ।
क्रियते कण्डरमाणिक्य धर्मराजेन [2]धीमता ॥ २ ॥

In the colophon :—

इति श्रीकण्डरमाणिक्यग्रामवासिना त्रिवेदिनारायणयज्वानुजेन धर्मराजाध्वरीन्द्रेण कौण्डिन्येन विपश्चिता विरचिते तर्कचूडामणौ शब्दखण्डः [3]समाप्तः ॥

1. It is found in the beginning of his work Tarkacūdāmani a commentary on Tatvachintāmani of Gangēśa Upādhyāya the manuscripts of which are available in The Saraswathi Mahal Library.

   Vide :— Descriptive Catalogue Vol. XI of 4585-4586. Manuscripts B. No. 2174 D No. 6217.

2. It is found in his work Yukthisangraha.

   Vide :— Descriptive Catalogue Vol. XI pp. 4764 Manuscripts D. No. 10953 a, D. No. 6576.

3. *Vide* :— Descriptive Catalogue Vol. XI pp, 4586. Colophon of the Mss. B. No. 2174 D. No. 6217.

The above colophon which is found in one of his works viz. Tarkacūḍāmani, also gives that Dharmarāja was the younger brother of Trivedi Nārāyana Yajwa of Kaundinyagotra. In the same manuscript another colophon at the end of Anumānakānda states that Trivedi Nārāyana Yajwa was his father.

इति श्रीकण्डरमाणिक्य ग्रामवासिना त्रिवेदिनारायणभट्टात्मजेन धर्मराजभट्टेन विरचिते तर्कचूडामणौ अनुमानपरिच्छेदः [1]संपूर्णः ॥

In his other works there is no reference to Trivedi Nārāyana Yajwa. Only in the colophons of Tarkacūḍāmani the name of Nārāyana Yajwa is mentioned. In the beginning of the Śabdakhanda also there is no [2]reference. So it is doubtful whether Nārāyana Yajwa was his father or brother. According to [3]some Veṅkatanātha of Velangudi was his father as well as his preceptor for which we do not find any reference in his works. The introductory verses in the Vedānta paribhāṣa says that Veṅkatanātha of Velangudi, was his Guru and Nrisimhaswamin of sixteenth century was his [4]paramaguru.

Dharmarāja is generally considered to have flourished and written his work in the middle of sixteenth [5]century. Mahāmahopādhyāya Sri Anantha Krishna Sastri, in his edition of this work brought out by the Calcutta University, has in his introduction propounded the view that he was a comtemporary of Appayadīkshita and must therefore be placed in the seventeenth [6]century. Dr. S. Radhakrishnan in his foreword to the above work has accepted the view of Sri [7]Ananthakrishna Sastri. Sri Prahalad Chandrashekhar Divanji, in the introduction of his edition of Siddhānta Bindu of Madhusūdana Saraswathi has said

1. *Vide*:— Mss. B. No. 2174; D. No. 6217 pp. 209 of Tanjore Saraswathi Mahal Library.

2. धर्मराजाध्वरीन्द्रेण बह्वृचेन विपश्चिता ।
शब्दखण्डप्रकाशस्य विवृतिः क्रियतेऽधुना ॥
Vide:— Manuscripts B. No. 2174 D. No. 6217. pp. 211.

3. In his introduction to Siddhanta Bindu of Madhusudhana Saraswati published by the Gaekwad Oriental Series Sri Prahalad Chandrasekara Divanji has stated that Venkatanatha was Dharmarāja's father as well as Guru.
Vide:— pp. CXX. of the introduction of the above work.

4. यदन्तेवासिपञ्चास्यैर्निरस्ता भेदिवारणाः ।
तं प्रणौमि नृसिंहाख्यं यतीन्द्रं परमं गुरुम् ॥
श्रीमद्वेङ्कटनाथाख्यान् वेलांगुडिनिवासिनः ।
जगद्गुरूनहं वन्दे सर्वतन्त्रप्रवर्तकान् ॥

5. *Vide*:— History of Indian philosohphy by Dasgupta Vol. 1 pp. 419. Indian philosophy by Dr. S. Radhakrishnan Vol. II pp. 451.

6. *Vide*:— Vedantaparibhaṣa with Paribhasabhumika Calcutta edition. pp. 125-126 of Bhumika.

7. *Ibid*:— forword pp. IX.

that Dharmarājadhwarin was a contemporary of Madhusūdana Saraswathi in his earlier part of his [1]life. Whatever may be the doubt regarding his date, there are no two opinions about his nativity as it has been established in his works which are found in the Tanjore Maharaja Serfoji's Saraswati Mahal Library.

Dharmarājā was a scholar of weight both in Nyāya Vaiśeṣika and Advaita-vedānta. In the introductory verse of Tarkacūḍāmani it is said that he had two names, 'Tarka cūdāmani and Nyāyabdhin' and the former name was given to his commentary on Gangaśa Upadhyaya's [2]Tatvachintāmani. His Vedānta paribhāṣā is an independent and excellent manual of Advaita Logic and Metaphysics. In this he has adopted the phraseology of Navya Nyaya introduced for the first time by Gangeśa Upādhyāya. In the introductory verses of Vedānta paribhāsa it has been stated that Dharmarājadhwarin was the author of [3] Vedānta paribhāṣa and Tarkacūḍamani – a commentary on Tatvachintamani or 'Mani' of Gangeśa [4]Upadhyaya. The colophon and also the introductory verses of Tarkacūḍamani corroborate the [5]authorship. Two more works by name 'Padayojanika or Padadīpika and Nyāyaratna' or Nyāyasiddhāntadīpavyākya are mentioned in the beginning of [6]Paribhāsa.

Padadīpika or Padayojanika is a commentary on Pañcapādika of Padmapāda. This work is unpublished and even the manuscripts appear to be

1. *Vide*:— pp. CXIX & CXV of the introduction to the Siddhanta Bindu of Madhusūdana Saraswathi published by the Gaekwad Oriental series.

2. कावेरीवारिपान प्रतिहततमसां मण्डिते पण्डितानां
 बृन्दैः श्रीरामचन्द्र स्मृतिबलविशदादेशतन्त्रार्थसारः ।
 देशे विख्यातवासो विविधगुरुकृपालेशतो लब्धबोधो
 न्यायाब्धिस्तर्कचूडामणिरिह कुरुते बह्वृचो धर्मराजः ॥

 Vide:— Mss. D. No. 6217 & B. No. 2174 of Tanjore Saraswathi Mahal Library.

3. तेन बोधाय मन्दानां वेदान्तार्थावलम्बिनी ।
 धर्मराजाध्वरीन्द्रेण परिभाषा वितन्यते ॥

4. येन चिन्तामणौ टीका दशटीकाविभञ्जिनी ।
 तर्कचूडामणिर्नाम कृता विद्वन्मनोरमा ॥

5. तत्र कण्डरमाणिक्य ग्रामरत्ननिवासिना ।
 मणिप्रकाशविवृतिर्धर्मराजेन तन्यते ॥

 इति श्रीकण्डरमाणिक्य ग्रामवासिना त्रिवेदिनारायणयज्वानुजेन धर्मराजाध्वरीन्द्रेण कौण्डिन्येन विपश्चिता विरचिते तर्कचूडामणौ शब्दखण्डः समाप्तः ।

 Vide:— Descriptive catalogue of Saraswathi Mahal Library Vol. XI pp. 4585 & 4586.
 Mss. D. No. 6217 & B. No. 2174.

6. टीका शशधरस्यापि बालव्युत्पत्तिदायिनी ।
 पदयोजनया पंचपादिका व्याकृता तथा ॥

 Vide:— Vedanta paribhasa introduction verse.

very rare. Mr. S. S. Suriyanarayana Sastri in his introduction to Vedānta paribhasa, published by the Adayar Library, says that only a single damaged and incomplete manuscript was noticed by 'Hultzsch' in the archives of Temple Library at [1]Tiruvadamarudur

Nyāyaratna' or Nyāya Siddhāntadīpaprakāśa' is a commentary on Sasadhara's 'Nyāyasiddhāntadīpa'. The beginning and the colophon of this work prove that it was written by [2] Dharmarāja. An incomplete manuscript in Telugu script of 'Nyāyaratna' is available in this library.

Yukthisangraha' is another work on Nyāya by Dharmarāja. His authorship of Yukthisangraha is known from the following verse.

नानाटीकोक्तयुक्तीनामुन्नीतानाञ्च संग्रहः ।
क्रियते कण्डरमाणिक्य धर्मराजेन [3]धीमता ॥

It is a resume of the various arguments in connection with the definition of Anumiti. It discusses, अनुमितिलक्षण, व्याधिकरण धर्मवाद, व्याप्तिवाद & पञ्चमलानुमानम् in separate chapters. This is his independent work on Nyāya. Dharmarāja's works on Nyāya are yet to be published. The known Vedānta works are only two, including Vedanta paribhasa the other work is the commentary on panchapadika.

Vedānta paribhasa is a manual of the Advaita philosophy expounding its doctrine in eight paricchedas. The first six chapters are entirely devoted to establish the six means of Valid knowledge or pramānas accepted by the Sankara School of Vedānta viz - Pratyakṣa, Anumāna, Upamāna, Sabda, Arthāpatti and Anupalabdhi. The seventh is entitled 'Viṣayapariccheda' and the last 'Prayojanapariccheda. If the first six pramanas are included under one heading, then there would be only three chapters in the work namely pramanas, prameya and prayojana. In the first six chapters the author has given the definition and classification etc. of all the six means of knowledge. While establishing the valid knowledge, we often find refutation of the other systems of philosophy, particularly Nyāyavaiśesika. For instance, the Naiyāyikas hold the view that

1. *Vide:*— pp. XIV—introduction to Vedānta paribhasa published by the Adayar Library and edited by S. S. Suryanarayana Sastri.

2. सोऽयं कौण्डिन्यगोत्रः शशधरः ... ... ।
जालैर्विशदयत्तितरां धर्मराजो बुधेन्द्रः ॥

In the colophon :—

इति धर्मराजविरचिते न्यायसिद्धान्तदीपप्रकाशे न्यायरत्ने मोक्षवादः समाप्तः ॥

Vide:— pp. 4755 & 4756. Descriptive catalogue Vol. XI of Saraswathi Mahal Library and Mss. B. No. 10940 D. No. 6559.

3. *Vide* :— pp. 4764 & 4765. Descriptive catalogue Vol. XI of Saraswathi Mahal Library and Mss. B No. 10953 a, D. No. 6576.

perceptual knowledge is a product of the contact of the mind with the [1] self'. While according to Vedānta it is eternal pure consciousness (Caitanya); only it is manifested through mental states (vritti). In the seventh chapter, Dharmarāja has discussed what is to be proved including therein the significance of the terms 'Tat and Tvam'. The last discusses the aim of philosophy, the qualification required for attaining the supreme Brahman, the means for attaining the same and the ultimate states of Jīvanmukthi and Videhamukthi. Thus though the way of treatment is different in Vedānta paribhāṣa; the topics considered are the same as those in the older works of Advaita Vedānta. The aim of the author seems to be to acquaint his readers the Ádvaita Doctrine from a logical view point. Because of this alone we find elaborate discussions as to the nature of each pramānas, its varieties etc., which we do not find in many other works of Vedānta systems.

The Vedānta paribhaṣa has been published for several times with many commentaries The most important of which is Vedānta sikhāmaṇi, by the author's son., Rāmakrishnādhwarin, which has also a sub gloss by name 'Maniprabha' by Amaradāsa. With these commentaries, paribhasa forms an excellent exposition of some of the fundamental principle of Advaita Vedānta.

---

1. इन्द्रियार्थसन्निकर्षजन्यं ज्ञानं प्रत्यक्षम् ।

ग्रन्थसमीक्षा

कौमुदीकथाकल्लोलिनी

श्रीयुतरामशरणशास्त्रिविरचितः ३४९ पुटात्मकः चौखाम्बाविद्याभवनादुपलब्धप्रकाशः सार्धाष्टरूप्यकार्घोऽप्यनर्घः कौमुदीकथाकल्लोलिनीनामायं ग्रन्थः अस्माकं हस्ताभ्याशमुपगतः। एकादशभिः कल्लोलैरतिवेलं वलमानेयं कल्लोलिनी स्पृहणीयेनानन्तरङ्गेण कञ्चुकेनाप्यतितरामावर्जयन्ती अपारं शब्दसागरं तितीर्षूणां नाव्यति नव्यसरणिप्रवृत्ता। भट्टिकाव्य-धातुवृत्ति-धातुकाव्यादिभ्यो विलक्षणेयं विलसति, यतस्तेषु हि काव्येषु काव्यत्वमत्यल्पं शास्त्रत्वं च भूयसा भासते, यानि च मनसिकृत्य "काव्यान्यपि यदीमानि व्याख्यागम्यानि शास्त्रवत्। उत्सवस्सुधियामेव हन्त दुर्मेधसो हताः॥" इति प्रतिभामहिता भामहादयोऽपि परीवादमुखरास्समजनिषत। अस्याः पुनस्समप्रवृत्ता कथामाधुरी शब्दवैखरी चेतीन्द्रचापस्येयमनश्वरतापादनचातुरी।

लक्षणानुगृहीतान् शब्दराशीनुदाहरन्ती हरन्ती कदध्वपरिभ्रमणपरीतं परितापं मधुरया कथाधारया, आराधयन्ती पाठकहृदयानि, अध्यापकानां अन्तेवसतां च संस्कृतभाषाकृताध्यवसायानां बहूपकरोतीति धारयन्त्येतेभ्योऽमूल्यग्रन्थलेखकेभ्यः संस्कृताभिमानिनः सहस्रकृत्वो धन्यवादान् इति ननु नैतन्न वक्तव्यम्।

वर्जयित्वौणादिकं वैदिकं च प्रकरणं प्रायेण भगवतः पाणिनेर्विषयो निरवशेषमाक्रान्तोनयेत्यन्यदिदं प्रमोदस्थानम्। सशिरःकम्पं श्लाघामहे चैषां रामशरणानां फलेग्रहिणमायसमायासम्। गतानुगतिकतामपहायैतैश्चूडान्तपण्डितैर्विरोधाभासश्लेषादिवक्रोक्तिवैचित्र्येषु स्वोपज्ञता नैकेषु स्थलेषु प्रदर्शितेति नूनं भवन्त्येते मार्गदर्शिनो सूक्तिसरणिष्वनूत्नेतरासु। अस्याः पञ्चमः कल्लोलः शाब्दिकचूडामणीनां निर्मातॄणां तद्धितमूढत्वं सुस्पष्टमाचष्टे। सर्वथा पठितव्यो, मन्तव्यो निदिध्यासितव्यश्चायं ग्रन्थ इति लेखिनीं निवर्तयामो व्यापारात्।

भारद्वाज वेङ्कटेश वरदराजशर्मा

தமிழ் வாழ்க.

தஞ்சை வெள்ளைப்பிள்ளையார் குறவஞ்சி

இறை வணக்கம்.

1. **ஆனைமுகன் அருள்பொழியும் ஆனந்த வல்லியுமை பிறைநாறு சீரடிக்கைம்**
மானையுள பெருவுடையார் சொக்கநாய கரும்வயித்தி சருந்தஞ்சை நாயகரும்
சோனைமலைக் கைலாயக் சனியீன்ற தொப்பாரங் கட்டிப்பிள் ளையாரும்
மீனவெல்கோ ழிக்கொடி யோனும்மகிழ வெள்ளைப் பிள்ளை குறமெனக்கு
முன்னடக்கவேணும்

(இதன் பொருள்) ஆனைமுகத்தையுடைய பிள்ளையாரும்; ஆனந்தவல்லி யாகிய உமையவளும்; சடைமுடியிலே விளங்குகின்ற மூன்றும் பிறைச்சந்திரனையும் சிறந்த பாதங்களையும், கையிலே மானையும் உடைய (தஞ்சைநாயகர்) என்று சொல்லப்படுகின்ற பெருவுடையாரும்; சொக்கலிங்கப்பெருமானும்; வைத்திய நாதக்கடவுளும்; இடையறாது மேகங்கள் தங்கியிருக்கின்ற கைலாயமலையில் வீற்றிருக்கின்ற, இறைவன் பெற்ற, தொப்பாரங்கட்டிப்பிள்ளையாரும்; மீன் வடிவமுள்ள வேலாயுதத்தையும், கோழிக்கொடியினையும் உடையவனாகிய முருகனும்; மகிழும்படியாக இந்த வெள்ளைப்பிள்ளையார் குறவஞ்சிக்கு முன் நடக்கவேண்டும்.

"இந்த வெள்ளைப்பிள்ளையார் குறவஞ்சி இனிது பாடி முடியவேண்டி ஆனைமுகன் முதலான தெய்வங்கள் துணை செய்யவேண்டும்" என்ற எண்ணத்தோடு இப்பாடலைப் பாடியிருக்கின்றார்.

ஆனைமுகன் :—நகரெங்கணும் காணப்படுகின்ற பிள்ளையார்.

ஆனந்தவல்லி .— தஞ்சைக்கு வடக்கே ஓடுகின்ற விண்ணாற்றின் தென் கரையில் திருவமிர்தகடேசுவரருடன் தோற்றமளிக்கும் இறைவி.

பெருவுடையார் தஞ்சை நாயகர் :— இராசராசனால் கட்டப்பட்ட தஞ்சைப் பெரியகோயிலில் எழுந்தருளியிருக்கின்ற இறைவன்.

தஞ்சை நாயகர் :—விண்ணாற்றங்கரை ஆனந்தவல்லி சமேத தஞ்சேசர் எனினும் பொருந்தும் (சரபேந்திர குறவஞ்சி, 53-ம் பாட்டின் உ. வே. சுவாமிநாத ஐயர் குறிப்புரை)

சொக்கநாயகர் :—தஞ்சை, கருந்திட்டைக்குடி, இராசவீதியில் கோயில் கொண்டுள்ள மீனுப்பிகையோடு கூடிய சோமசுந்தரர். ஐயன் குளம் வடகரையிலும் உள்ளார்.

வைத்தீசர் :—தஞ்சைப் பெரிய கோயிலுக்கு முன்னரே கட்டப்பட்ட கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற கருந்திட்டைக்குடி கருணாமூர்த்தி. இவர் கருங்குட்டம் தீர்த்ததால் இவருக்கு "கருங்குட்டம் தீர்த்த இறைவன்" என்ற பெயர் உண்டு. ஆகவே இவரைத்தான் வைத்தீசராகக் குறித்திருத்தல் வேண்டும்.

தொப்பாரங்கட்டிப் பிள்ளையார் :— இவர் தஞ்சை நாணயக்கார செட்டித் தெருவின் கிழக்கே உயர்ந்த இடத்தில் எழுந்தருளியிருக்கின்ற 'தொப்பைக்கு ஆரங்கேட்ட பிள்ளையார்.''

மீனவேல் கோழிக் கொடியோன் :— தஞ்சை, குறிச்சித்தெரு முருகர் 'மீனவேல்' என்பது சுவடியில் 'மீனவெல்' என்று குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஓசை நயங்கருதி இது 'மீனவெல்' என்றே பாட்டமைப்பில் சேர்க்கப்பட்டது. இனி இப்பாட்டுள்ள ஏட்டின் மூலப்படி இங்கு காட்டப் பட்டிருக்கின்றது.

முதல் ஏட்டின் முதல் பக்கம்

—னமுக அருமொழியு மானநதவலலி சயில—தர கொஙகணியீ.........
—ஹம பிறைநாறுசிர அடிததாயமென திருவும மீனவெல சளா கொடி—மைதா
—ணயுள பெறுவுடையா சொககநாயகருந கை தஞசை வெளளை பிளளை குறமென
—ரவுடைய வயிததீசர தஞசை நாயகரும கரு முனனடககவேணும.
மகிழத தொபபாரங கடடிப பிளளையாருந

முதல் ஏட்டின் 2-ம் பக்கம்

—லபபெருமாள சிஙகபபெரு மணிகணடப பெருமாள மினமலை வெஙகடேசர பாரார ரெகுநாதப பெருமாள ஆதிகேசவன முகபபிலாசாரப பெருமாள ஙகொடடை மெல கொத ணடப பெருமாள தாழிவ ணும் மார நீலகிவரன ரளவிதனமெ பொககுந தஞசை நரசிஙகபெருமாள......ளைபபிள வீர ககுமுனனடகக வெணும ச கொசசிமலை குடகுமலை ரிமலை தளிலே

கட்டுரைக் கவிதை

2. கோபாலப்பெருமாள் சிங்கப்பெருமாள் மணிகண்டப்பெருமாள்
மின்மலைவெங்கடேசர் ரகுநாதப்பெருமாள் ஆதிகேசவப்பெருமாள்
மூகப்பிலாறுமுகப்பெருமாள் கருடங்கோட்டைமேல கோதண்டப்பெருமாள்

தாமியான்நீலமேகன் விதனமேபோக்குந்தஞ்சை நரசிங்கப்பெருமாள்
ஏனையோருந் தஞ்சை வெள்ளைப்பிள்ளையார்குற
வஞ்சிக்குமுன்னடக்கவேணும்

(இ-ள்) முதற்பாட்டில் கூறிய சைவக்கடவுளர்களேயன்றி வைணவக் கடவுளரும் சைவக்கடவுளரோடு இக் குறவஞ்சிக்கு முன்நடக்க வேண்டும் என்பதாம்.

கோபாலப்பெருமாள் :— தஞ்சை வடக்குவாயிலின் தெற்கேயுள்ள இராசகோபால சுவாமிகோயிலில் உள்ள பெருமாள்.

சிங்கப்பெருமாள் :— தஞ்சை, விண்ணாற்றங்கரை, ஆனந்தவல்லியம்மன் கோயிலின் எதிரே எழுந்தருளியிருக்கின்றார்.

மணிகண்டப்பெருமாள் :— தஞ்சை கீழவீதி 'சர்ச்சாவாசல்' என்றழைக்கப் படும் சிறப்பு வாயிலுக்கு எதிரேயுள்ள நீல மிடற்றான்.

மின்மலை வெங்கடேசர் :— தஞ்சை ஐயங்கடைத் தெருவுக்கருகில், (திருப்பதியில் எழுந்தருளியுள்ளது போலவே) உயர்ந்த இடத்தில் மிகமிக உயரமான உருவத்தில் காட்சியளிக்கும் வெங்கடேசப்பெருமாள்.

ரகுநாதப்பெருமாள் :— தஞ்சை கீழக்கோட்டை வாயிலுக்கு மேற்கேயுள்ள கொண்டிராஜாபாளையத்தில் வடக்குநோக்கித் தோன்றுகின்ற இராமசுவாமிப் பெருமாள்.

ஆதிகேசவப்பெருமாள் :— இவர் முன்கூறிய வெங்கடேசப்பெருமாள் கோயிலின் தெற்குத் திருச்சுற்றில் எழுந்தருளியுள்ளார்.

முகப்பிலாறுமுகப்பெருமாள் :— வடக்கு வாயிலில் உள்ள சுப்பிரமணியக் கடவுள். (தஞ்சைக் கோட்டை கட்டியபிறகு இக்கோட்டைக்குக் கிழக்கிலும் வடக்கிலும் மட்டுமே வாசல்கள் இருந்தனவாகவும்; கிழக்கு வாயிலுக்குப் பிள்ளையாரைக் காவலாகவும், வடக்கு வாயிலுக்கு முருகனைக் காவலாகவும், வைத்ததாகக் கூறுவர்.)

கருடங்கோட்டை :— தஞ்சாவூருக்குக் "கருடங்கோட்டை" என்ற ஒரு பெயர் உண்டென்பர். இவ்வூர் ஒரு கருடப்பறவை உருவில் அமைக்கப்பட்டதென ஒரு காரணமும், 'இந்தக் கோட்டைக்குள் ஒருவருமே பாம்பு கடித்து இறந்ததில்லை, அப்படி இறக்க நேரிட்டாலும், தெய்வச்செயலாக அவர்கள் கோட்டைக்கு வெளியிலேயே சென்று இறப்பர்' என்று மறு காரணமும் கூறுவர்.

மேல கோதண்டப்பெருமாள் :— தஞ்சை ஐயன்கடைத்தெருவில் உள்ள பெருமாள். முற்கூறிய ரகுநாதப்பெருமாள் கோயிலின் மேற்கே இவர் இருப்பதாலும், பெருமாள் மேற்குநோக்கி நிற்பதாலும் இவருக்கு "மேல கோதண்டப் பெருமாள்" எனப் பெயரிட்டார்போலும்.

தாழியான் — தஞ்சை, மேலவீதி, பங்காரு காமாட்சியம்மன் கோயிலின் வடக்கில் உள்ள கிருஷ்ணன் எனலாம். 'சகாநாயக்கன் வீதியில் உள்ள கிருஷ்ணன்' என்று கூறவும் இடமுண்டு.

நீலமேகன் :— முற்கூறிய வெண்ணாற்றங்கரைச் சிங்கப்பெருமாள் கோயிலின் மேற்கே வீற்றிருக்கின்றார் நீலமேகப்பெருமாள்.

நரசிங்கப்பெருமாள் :— இவர் முற்கூறிய கொண்டிராஜாபாளையம் ரகுநாதப் பெருமாளை நோக்கி அமர்ந்திருக்கின்றார். இவர் சரித்திரப்புகழ் படைத்தவர். இவரைக் குறித்து ஒரு செவி வழிச் செய்தி கூறுவதாவது: இக்கோயிலின் திண்ணையில் கடைவைத்திருந்த "பெத்ததாசர்" என்பவர் வைணவப்பற்று மிக்கவர். இந்தக்கடவுளை இடையறாது பூசித்துவந்தாராம். திருநாமம் தரித்து வந்தவர்களைக் கண்டவுடன் எழுந்து அவர்களை வலம்வந்து வணங்கிவிட்டுப் பிறகுதான் தன் செயலை மேற்கொள்வாராம். அதுகேட்ட அக்கால அரசர் அவரைப் பரிகசிக்க எண்ணித் தனது அரசவையில் இரண்டு கழுதைகளைக் கொணர்ந்து ஒன்றிற்குத் திருமண் அணிவித்து, மற்றொன்றை வெறும் நெற்றியோடு நிறுத்திக்கொண்டு பெத்ததாசரை அழைத்துவரச் செய்தாராம். அவர் வந்து திருமண் தரித்த கழுதையினை வலம் வந்து, விழுந்து வணங்கி எழுந்து அரசரது ஏவலுக்குக் காத்திருந்தாராம்.

"இந்தக்கழுதையினை ஏன் வணங்கவில்லை" என்று கேட்ட அரசருக்கு "இது (திருமண் தரிக்காதது) உன்னை ஒத்த கழுதை, அது (திருமண் தரித்தது) என்னை ஒத்த கழுதை" என்று பதிலளிக்கவே கோபம் கொண்ட அரசர் இவரைக் கழுவேற்றப்பணித்தாராம்.

தஞ்சைக்கு மேற்கே சுமார் மூன்று கல் தொலைவில் உள்ள ஒரு மேட்டில் இருந்த கழுவருகில் இவர் அழைத்துச்செல்லப்பட்டாராம். இவரை அழைத்துச் செல்லும்போது இவர் வழிநெடுகிலும் "நரசிம்மா" "நரசிம்மா" என்று இப்பெருமாளின் பெயரையே சொல்லிக்கொண்டு சென்றாராம். கழுமரத்தை அணுகியதும் கழுமரம் தீப்பற்றி எரிந்ததாம். அதுகண்ட அரசர் "என்னைக் கோபிக்காமல் இக்கழுமரத்தை எரித்தது என்மீதுள்ள இரக்கத்தினால்தான்" என்று சொல்லி இவர் கால்களில் விழுந்து வணங்கினாராம். மற்றுமுள்ள எல்லோரும் வணங்கினார்களாம். "பிரகலாதனைக் காத்த இறைவன் என்னையும் அவ்வழியிலேயே காப்பாற்றினர்" என்று இவர் கூறினாராம்.

இவரைக் கழுவேற்றிய பாதிப்பையே இவருக்கு இறைமாக வழங்கியதாகக் கூறுவர். இவரைக் கழுவேற்ற அமைத்த மேடு 'களிமேடு' ஆயிற்றென்பர். கழுதை காரணமாக இவருக்குக் கொடுக்கப்பட்ட மேடு 'கழுதைமேடு' அது 'களி மேடாயிற்' றென்பாருமுளர்.

இத்தகைய கொடிய விசனத்தைப்போக்கியதால் 'எத்தகைய விசனத்தை யும் போக்கவல்லவர்' எனக்கருதி இவ்விறைவனை "விதனமே போக்குந்தஞ்சை நரசிங்கப்பெருமாள்" என்று அடைமொழி கொடுத்திருக்கிறார்போலும்.

ஏனையோர் என்றதால், மேலவீதி கொங்கணீஸ்வரர், பங்காரு காமாட்சி, தெற்குவீதி காசிவிசுவநாதர் முதலான எல்லாக் கடவுளரையும் குறிக்க இடமிருக்கின்றது.

மேற்கூறிய இரண்டு பாடல்களும் முழு உருவில் சீர்ப்படுத்த இயலாத நிலையிலுள்ளன. இருப்பினும் இயன்றவரை சீர்ப்படுத்தப்பட்டுள்ளன.

குறத்தி வருகை

3. கொச்சிமலை குடகுமலை குமரிமலை தனிலே
குறத்திமகள் குறத்தியெங்கள் கோத்திரங்காணம்மே.
வச்சிரக்கை வேடருக்குத் தலைவனெங்கள் குறவன்.
வாலிசுக்கி ரீவகுலக் குறவனெங்கள் குறவன்.
பச்சைமயில் வள்ளியினை வேலருக்குத் தந்தான்.
பாட்டியுட பாட்டியுட பாட்டியுட பாட்டி
மெச்சுகுல ஞனவீர ரிருவருக்கு முன்னோன்
வெள்ளைப்பிள்ளை யார்புகழை விரிக்கவந்தே னம்மே.

(இ-ள்) அம்மே! 'கொச்சிமலை, குடகுமலை, குமரிமலை, முதலான மலை களில் வாழ்கின்ற குறத்தி' என்று சொல்லத்தக்க இலக்கணமுடைய 'குறத்தி யின மகள் குறத்தி' என்ற புகழ்பெற்றது எங்கள் வழிமுறையாகும். வச்சிரா யுதம் போன்ற வலிமை மிக்க கைகளைக்கொண்ட வேடர்கள் பலருக்கும் தலை வனாக எங்கள் குறவன் இருக்கிறான். வாலியைப்போன்ற வீரகுணமும், சுக்கிரீ வனைப்போன்ற பக்தி குணமும் பொருந்திய குலத்திலே பிறந்தவன்; குறவன் என்று சொல்லக்கூடிய குறவன். பச்சைமயில் போன்ற சாயலையும், இயல்பை யும் உடைய வள்ளியம்மையை முருகனுக்கு மணம் புரிவித்தவனும் அவனே. எங் களின் ஒன்பது தலைமுறைக்கு முந்திய பாட்டியின் காலத்தில் புகழ்ந்து பேசப் பட்ட குலத்தவனான வீரபத்திரன், முருகன் ஆகிய இருவருக்கும் மூத்தவனாகிய வெள்ளைப்பிள்ளையாரின் புகழை இங்கு நான் கூறவந்திருக்கின்றேன்.

'குமரிமலை' என்பது 'குமரிக்கோடு'. அது கடல் கொண்டொழிந்த குமரி நாட்டில் இருந்தது. இதனால் இவள் மிகப்பழமையான குலக்குறத்தி என்பது பெறப்படும். வாலி சுக்கிரீவன், முதலானோர் வாழ்ந்த இடம் 'குமரிமலை' எனினும் அமையும். 'வாலி சுக்கிரீவகுலம்' என்றதால் மலைப்பக்கங்களிலும் காடுகளிலும் அதிகமாகக் காணப்படும் குரங்குகளின் தலைவர்களைக்குறித்து, அவர்களுக்கு உரிய குணங்களெல்லாம் எங்கள் தலைவர்களுக்கும் உண்டு' என்பது தோன்றுகிறது.

பாட்டியுடைய பாட்டியுடைய பாட்டியுடைய பாட்டி என்றது தன்னையும் சேர்த்து ஒன்பது தலைமுறைகள். முப்பாட்டி, கொள்ளுப்பாட்டி, எள்ளுப்பாட்டி, உளுந்தப்பாட்டி என்பது வழக்கு. இவைகளையும் கடந்து சென்றதால் இவள், காலத்தால் மூத்தபாட்டி என்பது தோன்றும்.

குலவீரனான வீரர் இருவர் (1) வேடனாக வந்து வள்ளியை மணந்த முருகன் (2) வீரபத்திரர்.

மலைநாடும் சொந்தமலையும் கூறுதல்

கண்ணிகள்

4. (1)	வெள்ளிமலை	இமயகிரி	எங்களுட	நாடு
	கிள்ளிமலை	நேரிமலை	எங்களுட	நாடு
(2)	பள்ளிமலை	பொதியமலை	எங்களுட	நாடு
	வள்ளிமலை	கந்தன்மலை	எங்களுட	நாடு
(3)	ஆனைமலை	குதிரைமலை	எங்களுட	நாடு
	ஆரணத்தார்	மலைகளெல்லாம்	எங்களுட	நாடு
(4)	மானின்மலை	கடம்பைமலை	எங்களுட	நாடு
	கானமலை	நீலகிரி	எங்களுட	நாடு
(5)	சொந்தமலை	அருவிமலை	எங்களுட	நாடு
	சோணகிரி	வையைநதி	எங்களுட	நாடு

(இ-ள்) கைலாயமலை, இமயமலை, சோழநாட்டுமலை, நேரிமலை, (திருச்சிராப்) பள்ளிமலை, பொதியமலை, வள்ளிமலை, கந்தன்மலை, ஆனைமலை, குதிரைமலை, பிரான்மலை, மானின்மலை, கடம்பைமலை, கானமலை, நீலகிரி (மலை,) முதலான மலைகளெல்லாம் எங்களுடைய நாட்டில் இருக்கின்றன. (ஆகவே அவைகளே எங்களுக்கு இருப்பிடம். ஆனால்,) எங்களுக்குச் சொந்தமானமலை 'அருவிமலை' எனப்படும், குற்றாலமலையாகும். அது வையை நதி பாய்கின்ற பாண்டிநாட்டதாகும். அதுமட்டுமன்றி 'சோணசைலம்' எனப்படும் திருவண்ணாமலையும் எங்களது சொந்தமலையேயாம்.

'கிள்ளி' என்பான் சோழன். அவனது நாட்டில் உள்ள மலை 'கிள்ளிமலை' எனப்பட்டது. நேரிமலை-சோணாட்டு மலைகளில் மிகச்சிறந்தது.

"நேரியெங்கள் சிறந்தமலையம்மே"; 'நேரிமலை மேற்குடிசை நிலைக்க வைத்தோமம்மே," "நீடுமது எங்கள்குடி தழைக்க வைத்ததம்மே" (சரபேந்திர பூபால குறவஞ்சி (40-6,7.) 'அரணத்தார் மலை' என்றது 'வேதநாயகன்மலை' என்பதாம். வேதநாயகன் பிரம்மா, அல்லது சிவபெருமான். அதனால் பிரான் மலை, பிரமன்மலை, பிராய்மலை, பராய்மலை என்பன பொருந்த இடமுண்டு. ("பிரான்மலையுஞ் சிராமலையும் பிறமலையுமம்மே" சரபேந்திர பூபால குறவஞ்சி) 'சோணகிரி' என்பது 'சோணசைலம்' எனப்படுவது.

நாட்டுவளங் கூறுதல்

5. கரும்புகளுங் கதலியுஞ்செங் கதிர்விரியு நாடு
காவேரி நீர்வயல்கள் கரைபுரளும் நாடு
குரும்பைகளும் இளநீரும் குலைநெருங்கு நாடு
கோட்டகத்தில் நிறைமீன்கள் குழம்புகின்ற நாடு
சுரும்பினங்கள் இசைமுழங்கும் சோலையெங்கள் நாடு
தீந்தெங்கின் பாளையினம் சூழ்ந்ததெங்கள் நாடு
விரும்பு(ம்) நெல் முப்போகம் விளையுமெங்கள் நாடு
வெள்ளைப்பிள்ளை யார்தஞ்சை மேவியசோணாடு

(இ-ள்) கரும்புகளும், வாழைகளும் செழித்து வளருகின்ற நாடு. காவிரி யாற்றின் நீர் வயல்களில் கரைபுரண்டு நிற்கின்ற செழிப்புள்ள நாடு. தென்னை மரப்பாளைகளில் குரும்பைகளும் இளநீரும் அடர்த்தியாக நெருங்கி, நிரம்பியிருக் கின்ற வளப்பம் பொருந்திய நாடு. குளத்தில் மீன்கள் மிகுதியால் ஒன்றோ டொன்று மோதிக்கொண்டிருக்கின்ற நாடு. வண்டுகள் ஒலிக்கின்ற சோலைகள் சூழ்ந்த நாடு. பாளையின் இனமாகிய, தென்னை, கமுகு, பனை முதலிய மரங்கள் சூழ்ந்திருக்கின்ற நாடு. வயல்களில் நெல் மூன்றுபோகம் விளைகின்ற நாடு. இத்துணை சிறப்பு வாய்ந்த நாடு, வெள்ளைப்பிள்ளையார் தஞ்சையில் வீற்றிருக்கும் சிறப்புடைய சோழநாடாகும்.

வள்ளி முருகன் வழிபாடு

6. திருப்பரங்குன் றெட்டிகுடி, செங்கிமலை, வயலூர்
திருத்தணிசுப் பிரமணியம், சித்தவல்ல புரமும்
குருசரனெஞ் சோலைமலை, குகனேறும் பழனி,
குன்றக்குடி கதிர்காமக் குன்றுகழுக் குன்று,

திருப்பவள மலைசிரா மலைவிராளி மலையும்
சென்றுசுனை யாடிசெய வள்ளியைத் தொழுவோம்
தருகவனத் தழையுடுப்போந் தளிரையுமே விடுப்போம்
தஞ்சைவெள்ளைப் பிள்ளையார்தந் தம்பியினைத் தொழுவோம்.

(இ-ள்) திருப்பரங்குன்று, எட்டிகுடி, சென்னிமலை, வயலூர், திருத்தணி, சுப்பிரமணிய(புர)ர், சித்தர்வல்லபுரம், கூர்ச்சரம், சோலைமலை, முருகனேறி வீற்றிருக்கின்ற பழனி, குன்றக்குடி, கதிர்காமம், திருக்கழுக்குன்று, திருப்பவள மலை, திருச்சிராப்பள்ளி மலை, விராலிமலை முதலான இடங்களுக்குச்சென்று, ஆங்காங்கேயுள்ள சுனைகளிலும், குளங்களிலும் நீராடிவந்து எங்கள் குலவிளக்காகிய வள்ளியம்மையைத் தொழுவோம். தாருகாவனத்திலுள்ள தழைகளை ஆடையாக உடுப்போம். அதன் தளிர்களை மாலையாக அணிவோம். தஞ்சை வெள்ளைப்பிள்ளையாரின் தம்பியாகிய முருகவேளைத் தொழுவோம்.

மேற் கூறப்பட்ட மலைகள், ஊர்கள் யாவும் முருகன் வீற்றிருக்கின்ற இடங்களாகும். 'செங்கிமலை' என்பது 'சென்னிமலை' எனப்படும் முருகர் தலம். வயலூர்: திருப்புகழ் பாடப்பெற்ற தலம். சுப்பிரமணியம்: இது உடுப்பி கள்ளிக்கோட்டைக்குத் தெ. கிழக்கு 40 கல் தொலைவில் உள்ள இடம். அகத்தியர் கமண்டலத்தைக் காகஉருவில் விநயகர் கவிழ்த்தது (காவேரி). (அகில இந்திய ஆலய வழிகாட்டி, பக்கம் 135) சித்தவல்லபுரம் என்பது சித்தபுரமாக இருக்குமெனின் இதில் முருகன் கோயில் (பிரசித்தமாக) இருப்பதாகத் தெரியவில்லை. மேற்கூறிய யாவும் முருகன் தலமாக இருப்பதால் இது முருகன் பிரசித்தி பெற்ற 'சத்தி முற்றம்' என்ற ஊராக இருக்கலாம் எனக்கருத இடமிருக்கிறது. குருசரன் என்றதனை கூர்ச்சரம் என்று எழுதியதினும், முருகன் வீற்றிருக்கும் 'கூந்தலூர்' எனல் பொருந்தும். மேற்கண்ட தலங்களில் நீராடி வள்ளியையும் முருகனையும் தொழுவதாகக் கூறுகின்றாள்.

நகரவரிசையும் தொழிலும்

7. தில்லைகச்சி, காளத்தி, திருவாரூர், காசி,
திருவானைக் காவல்,சீர் காழி,திருக் கடலூர்
முல்லைவனம், நெல்லைவனம், முதுகுன்றங், கழுகூர்,
மூவலூர், செங்காடு, முறுவல்திருப் பனந்தாள்,
மல்லை,திரு வையாறு, மாயூரங், கொறுக்கை,
மறைக்காடு, வெண்காடு, மழபாடி, மயிலை,
வில்லைவய லூரன் குளுவன் கொக்குகளைப் பிடித்து,
வெள்ளைப்பிள்ளை யார்நாட்டில் வித்துவந்து பிழைப்போம்,

(இ-ள்) சிதம்பரம், காஞ்சீபுரம், திருக்காளத்தி, திருவாரூர், காசி, திருவானைக்காவல், சீர்காழி, திருக்கடவூர், திருமுல்லைவாயில், திருநெல்வேலி, திருமுதுகுன்றம் (விருத்தாசலம்), திருக்கழுக்குன்றம், மூவலூர், திருச்செங்காட்டாங்குடி, திருமருகல், திருப்பனந்தாள், மாமல்லபுரம், திருவையாறு, மாயூரம், கொற்கை, திருமறைக்காடு (வேதாரணியம்), திருவெண்காடு, திருமழபாடி, மயிலாப்பூர் முதலான ஊர்களின் அருகிலுள்ள வயல்களில் உணவருந்த வருகின்ற கொக்குகளை, எங்கள் குளுவன் பிடித்துவர, அவைகளை நாங்கள் (இந்த) வெள்ளைப்பிள்ளையாருடைய நாட்டில் விற்று, அதன் ஊதியத்தைப் பெற்றுவந்து பிழைப்போம்.

'மல்லை' என்றதனை 'மகாபலிபுரம்' எனலாம் 'வில்லை' என்றதனை 'ஸ்ரீவில்லிபுத்தூர்' எனினும் அமையும். ஆனால் 'வில்லை' என்பதற்கு 'அண்டை' 'அருகில்' எனவே ஈண்டு சிறப்புடைத்து. 'தங்கள் தொழில்களில் ஒன்று கொக்குகளைப் பிடித்து விற்பது' என்பது, இந்தப் பாட்டிலும் அடுத்த பாட்டிலும் கூறப்படுகிறது. இவை யாவும் சிவத்தலங்கள். 'கொறுக்கை' என்ற ஊர் காரைக்கால் அருகில் உளது.

நகரவரிசையும் தொழிலும்

8. திருவரங்கம், குடந்தை, கச்சி, சிறுபுலியூர், உறையூர்
சீராம விண்ணகரம், சேறைமழை பெய்யும்
அரிமேய விண்ணகரம், ஆதனூர், ரழுந்தூர்,
ஆய்ப்பாடி, வடமதுரை, அத்தகிரி, புலியூர்,
பரமேய விண்ணகரம், பாவனசம், புவனம்,
காமபாத கன்பள்ளி, பதரிகாச் சிரமம்,
குருகூர், வய லூர்களெங்கும் கொக்குகளைப் பிடித்து
கூறிவிற் போந்தஞ்சைக் குஞ்சரவன் நாட்டில்.

(இ-ள்) "திருவரங்கம், கும்பகோணம், காஞ்சீபுரம், சிறுபுலியூர், உறையூர், சீராமவிண்ணகரம், திருச்சேறை, மழை மிகப்பெய்கின்ற, திருமால் வீற்றிருக்கின்ற விண்ணகரம், ஆதனூர், திருவழுந்தூர், ஆய்ப்பாடி, வடமதுரை, அத்தகிரி, திருப்புலியூர், பரமேச்சுர விண்ணகரம், பாவனசம், திருபுவனம், காமபாதகன் பள்ளி, பதிரிகாச்சிரமம், குருகூர் முதலான வைணவத்தலங்களிலுமுள்ள வயல்களில் மேய்கின்ற கொக்குகளையும் பிடித்து தஞ்சை வெள்ளைப்பிள்ளையார் நாட்டில் விற்போம்."

திருவரங்கம் :— ஸ்ரீரங்கம்	நாலாயிர திவ்யப்பிரபந்தம் 108 திருப்பதிப் பிரபாவம்	பக்கம் 29
கும்பகோணம் :—சாரங்கபாணி, சக்கரபாணிப் பெருமாள் கோயில்கள், திருக்குடந்தை.	,,	33

காஞ்சீபுரம் :–வரதராஜப்பெருமாள் கோயில், உலகளந்த பெருமாள் ; திருவூரகம்.	நாலாயிர திவ்யப்பிரபந்தம் 108 திருப்பதிப் பிரபாவம்	பக்கம் 45
சிறுபுலியூர் :–திருச்சிறுபுலியூர்.	,,	32
உறையூர் :–நிசுளாபுரி.	,,	30
சீராமவிண்ணகரம் :–காழிச்சீராமவிண்ணகரம். சீர்காழி.	,,	35
சேறை :–ஸாரக்ஷேத்திரம்.	,,	32
அரிமேயவிண்ணகரம் :–குடமாடுகூத்தர் கோயில்.	,,	36
ஆதனூர் :–ஆண்டளக்குமையன் பெருமாள்-கோவில்.	,,	32
திருவழுந்தூர் :–ஆமருவியப்பன்.	,,	32
ஆய்ப்பாடி :–கோகுலம்.	,,	51
வடமதுரை :–கோவர்த்தனம்.	,,	51
அத்தகிரி :–திருக்கச்சி–அத்திகிரி.	,,	44
புலியூர் :–திருப்புலியூர் (கொட்டாரக்கரை).	,,	42
பரமேயவிண்ணகரம் :–பரமேச்சுரவிண்ணகரம்.	,,	46

'பாவனாசதீர்த்தம்' என்பது திருப்பதி மலையில் உளது. ஆயினும் பாவனாசம், புவனம் என்பதனைச்சேர்த்து 'பாவனாசபுவனம்' எனல் பொருந்தும்.

பாவனாசபுவனம் :–திருபுவனம், சிவபெருமான்–நரசிம்மத்தை அழிக்கச் சரப வடிவெடுத்த இடம்.	ஆலய வழிகாட்டி	78
காமபாதகன்பள்ளி :–இவ்வூரின் பெயர்விளக்கம் அறிதற்கிடமில்லை.		
பதரிகாசிரமம் :–வைணவத்தலம்.	ஆலய வழிகாட்டி	43
குருகூர் :–ஆழ்வார் திருநகரி.	,, (நாலாயிர......பிரபாவம்)	117 } 40 }

'குருகூர் வயலூர்களெங்கும்' என்பதனை 'குருகூர் முதலான ஊர்களின் வயல்களெங்கும்' என்று சொல்லல் பொருந்தும். 'குஞ்சரவன்' என்பது யானை முகத்தோடு கூடிய பிள்ளையார். இப்பாட்டில் காமபாதகன்பள்ளி தவிர பிறவெல்லாம் வைணவத் தலங்களாகவே கூறியது நோக்கத்தக்கது.

குறத்தி குறி சொல்லப் புகுதல்

9. கொங்குமலை, உத்தரகுரு தேச,வங்க தேசம்,
குமரிமுனை, முதலாகக் குறிசொல்வே னம்மே,

மங்கலத்தை மூத்திடுவை; மக்களையும் பெறுவை.
மருமகனும் மருமகளும் மனைநிறைந்து வாழ்வை.
திங்களணி முகத்தாளே! தேனேயஞ் சுகமே!
செழும்பாகு கற்கண்டே! சீனிமொழி யாளே!
வங்கணமே! செந்திருவே! தஞ்சைவரு வெள்ளை
வாரணத்தார் வரவுசொல்ல வலக்கைதனைக் காட்டாய்.

(இ-ள்) "அம்மே! நான் கொங்குதேசம், உத்தரகுருதேசம், வங்கதேசம், கன்னியாகுமரிமுனை முதலாக எல்லாத் தேசங்களிலும் உள்ளவர்களுக்குக் குறி சொல்லுவேன். சந்திரனைப்போன்ற அழகுள்ள முகத்தையுடையவளே! தேன்போன்று இனிமையானவளே!! கிளிபோன்றவளே! இனிப்பான பாகு, கற்கண்டு, சீனி இவைகளைப்போன்ற மொழியினை உடையவளே!! அன்புடையாளே! இலக்குமி போன்றவளே!! தஞ்சையில் வாழ்கின்ற வெள்ளைப்பிள்ளையாரின் வருகையினைக்கூற உனது வலதுகையினைக் காட்டு அம்மே! நீ மங்கலத்தை மூத்திடுவாய்; மக்களையும் பெறுவாய். மருமகனும் மருமகளும் மனைநிறைய நீ வாழ்வாய்."

"நான் எல்லாத்தேசமும் சென்று குறி சொல்பவள். இந்த வெள்ளைப் பிள்ளையார் நாட்டிற்கு வந்து குறி கூறப் புகுந்தேன். (உனது வலதுகையைப் பார்த்த மாத்திரத்தில்) நீ நீண்ட நாட்கள் கட்டுக் கழுத்தியாக இருப்பாய். மக்களைப்பெறுவாய். மருமகன், மருமகள் பேரப்பிள்ளைகள் வீடுநிறைய இருப்பார்கள்." என்று குறத்தி கூறுகிருள். "மங்கலத்தை மூத்திடுவை" என்றது "வயது முதிர்ந்தவளாக இருந்து கணவனோடு வாழ்வாய்" என்பதாம். மங்கிலியத்தை என்பது மங்கலத்தை எனப்பட்டது.

கையின் சிறப்புக் கூறுதல்

10. அன்னமில்லை என்னுமை லார்க்குமிடு முன்கை.
அந்தணர்க்குப் படியரிசி யளக்குமடி யுன்கை.
இன்னமின்னம் வருவிருந்துக் கிடைவளரு முன்கை.
எந்நாளும் பிள்ளைப்பால் வார்க்குமடி யுன்கை.
பொன்னையே யள்ளியள்ளி யளையுமடி யுன்கை.
புண்ணியத்தி லேகொடுத்துப் புகழ்படைக்கு முன்கை.
கன்னிகா தானமே செய்யுமடி யுன்கை.
கணபதியார் தம்மையே வந்தனைசெய் கையே.

(இ-ள்) "அம்மே! எல்லோருக்கும் "சோறு இல்லை" என்று சொல்லாமல் சோறிடுகின்ற கை உனது கை. அந்தணர்களுக்குப் படியரிசி கொடுக்கின்ற கை உனது கை. மேலும் மேலும் வருகின்ற விருந்தினருக்கு உணவளித்து, இனி

வருகின்ற விருந்தினரை எதிர்பார்க்கின்றகை உனது கை. பாலில்லாப் பிள்ளைகளுக்குப் பால் வார்க்கின்றகை உனது கை. புலவர்களுக்கெல்லாம் பொன்னை யள்ளிக் கொடுக்கின்றகை உனது கை. புண்ணியமான காரியங்களுக்குத் தருமம் செய்து புகழ்படைப்பது உன் கை. கன்னிகாதானம் செய்யும் இயல்பினை யுடையது உனது கை. வெள்ளைப் பிள்ளையாரை வணங்குகின்ற கையும் உனது கையேயாகும்.''

"அள்ளியள்ளித் தருமமெல்லாம் செய்யுமிந்தக் கையே" என்பது பெத்லகேம் குறவஞ்சி. மேலும், தலைவி 'அன்னதானம் செய்வாள்; அழகிய தண்ணளியை உடைய அனைவருக்கும் அரிசியின் மூலம் அன்னதானம் செய்வாள்' என்பதாம்.

"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பார்
நல்விருந்து வானத் தவர்க்கு." —குறள் 86

இதனையே இன்னமின்னம் வருவிருந்துக்கிடை வளரு முன்கையாகக் கூறப்பட்டதாம். எந்நாளும் பிள்ளைப்பால் வார்ப்பது; 'ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்' என்பதாகச் சொல்லப்பட்டது போலும். பொன்னையள்ளுதல்: 'வீருக நவநிதியம் அள்ளுயுமிந்தக்கையே" (குற்றாலக்குறவஞ்சி, பாட்டு-28) என்றாற்போலக் கூறப்பட்டது. புண்ணியத்திலே கொடுத்துப் புகழ்படைக்கு முன்கை என்றது, குற்றாலக்குறவஞ்சி 28ம் பாட்டில் "மனையறத்தால் அறம் பெருக்கித் திறம் வளர்க்கும் கையே" என்றதனோடு ஒப்புநோக்கற்பாலது. அத்துடன் பெத்லகேம் குறவஞ்சியில் "தெள்ளுதமிழ்ப் பாவலரைப் பரிசனிக்குங் கையே" என்றதாலும் புகழ் படைத்தல் பெறப்படும்.

இவளுடைய கையைப் பார்த்தமாத்திரத்தில் 'இவள் மகராசி' என்று அறிந்த குறத்தி "உன்கை கன்னிகாதானம்" செய்யும் என்று கூறுகிறாள். ஆகவே "இவளுக்கு பிள்ளைப்பேறு உண்டு" என்று முன்னதாகவே கூறிவிடுகிறாள். இவளுக்குப் பிள்ளையில்லாக் குறையால் இவள் கணவன் இவளை விலக்கி யிருக்கிறான். குறத்தி இப்படிச் சொன்னதால் தலைவி மகிழ்ந்திருத்தல் வேண்டும்

குறத்தி செயல்

11. முறத்தில்ரொம்ப நெல்லுதனை மொண்டுவந்து வைத்து,
முன்னிருந்து கேட்கிலதை மூணகப் பகுந்து,
குறத்திமகள் குறத்திமெச்சக் குறிசொல்லவே னம்மே.
குஞ்சானுக் கஞ்சாறு கஞ்சிவா ரம்மே.
சிறுகுழந்தைக் கிவன்மூத்தான்; காக்கைகத்த லறிவான்;
செண்டடித்துச் செண்டடித்துச் சிங்கிகளும் பிடிப்பான்.
விறல்திறத்தில் அரசுமெச்சுங் குறம்பாடுந் தஞ்சை
வெள்ளைப்பிள்ளை யார்சேட்டு மெச்சினர்கா ணம்மே.

(இ-ள்) "முறத்தில் கொஞ்சம் நெல்லைக் கொண்டுவந்து வைத்து அதன் முன்னாக இருந்து கேட்டால், அந்நெல்லை மூன்றாகப் பகிர்ந்து எங்கள் குலக் குறத்திமகள் குறத்தியே மெச்சும் படியாக நான் குறி கூறுவேன். என் குழந்தைக்கு ஐந்தாறு சோற்றுடன் கொஞ்சம் கஞ்சி ஊற்றம்மே. என்து கைக்குழந்தைக்கு மூத்தவன் இவன். காக்கை கத்துவதைத் தெரிந்துகொள்வான். செண்டாலடித்தடித்துச் சிங்கிகளைப்பிடித்துவிடுவான். நான்,வலிமையின் திறமையினால் பாடிய குறியினைக்கேட்டு, அரசர்கள் மகிழும்படியாகக் குறம்பாடுகின்ற தஞ்சையில் வீற்றிருக்கின்ற வெள்ளைப்பிள்ளையார் மெச்சினாரம்மே."

"முறத்தில் இட்ட நெல்லை வறுத்துப்பார்த்துக் குறி கூறுவேன்."
(திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம் 74)

முறத்தில் நெல் கேட்டல், (கும்பேசர் குறவஞ்சி — 67/2ம் பாட்டில் "நிறைப முறத்தில் செந்நெல்" என்று குறத்தி கேட்பதாகக் கூறியதால்) குறத்தியர் இயல்பாகும். மேலும் அவர்கள் தங்கள் கையில் ஒரு பிள்ளையுடன் (பெரும்பாலும்) வருவர். அக்குழந்தையின் பெயரால் உணவு கேட்பது வழக்கம். ஆகவே "குஞ்சானுக் கஞ்சாறு கஞ்சிவாரம்மே" என்றார். நெல்லை மூன்றாகப் பகிர்ந்து சொல்லவே "முச்சிரங்கை நெல்லளந்து கொடுவா" (மீனாட்சி குறவ-26) என்று கூறியதுபோல் கூறினார்போலும். மேலும் "பாங்குடனே நிறைநாழி பூங்கொடியே வைப்பாய்" (திருமலையாண்டவர் குறவஞ்சி), "முத்துக்கொண்டு வாடி நிறைநாழி" (அர்த்தநாரீசர் குறவஞ்சி), என்பனவாலும் அறியலாம். 'சிங்கி' என்றது 'நண்டு' எனலாம். நண்டினைச் செண்டாலடித்தடித்துப் பிடிப்பது வழக்கம். ஆகவே 'சிறுபிள்ளை செண்டாலடித்து நண்டு பிடித்தான்' எனல் பொருந்தும். சிங்கிப் பறவை எனினுமாம்.

'தஞ்சாவூர் அரசர்கள் மெச்சும்படியாகக் குறம்பாடினால் அது, உலக முழுவதும் ஏற்புடைத்து' என்பது, இவர் காலத்தில் மட்டுமல்ல; இப்போதும் தஞ்சை மக்கள் ஏற்றுக்கொண்டால் எல்லா ஊர்மக்களும் ஏற்றுக்கொள்ளுவார்கள். ஆகவேதான் "அரசு மெச்சுங் குறம்பாடுந் தஞ்சை" என்றார்.

குறி பார்த்தல்

12. உள்ளங்கை நெற்குறியால் ஒத்தைபடத் தொட்டாய்.
எண்ணிரண்டு நாளையிலே உன்கணவன் வருவான்.
வள்ளியம்மை யாணையெந்தன் குறக்கூடை யாணை.
மகனாணை, மகளாணை, வலதுகண்ணி னாணை.
கள்ளமில்லை என்னாணை, என்குறிபொய் யாது.
காசியுள தேசளவுங் கைகண்ட தம்மே.

வெள்ளிமலை தனிலுறையுஞ் சிவமகனர் வெள்ளைப்
பிள்ளையாரு மறிவார்; வேலவரு மறிவார்.

(இ-ள்) "உள்ளங்கை நெல்குறியில் நீ எடுத்த நெல் ஒற்றைப்படையாக இருப்பதால் பிரிந்திருக்கின்ற உனது கணவன் இன்னும் பதினறு நாட்களில் வருவான். இது உண்மை. வள்ளிநாயகிமேல் ஆணையாகவும், என் குறக்கூடைமேல் ஆணையாகவும், என் மகன்மேல் ஆணையாகவும், மகள்மேல் ஆணையாகவும், எனது வலது கண்ணின்மேல் ஆணையாகவும், கள்ளமில்லாமல் என்மேலாணையாகவும் சொல்கிறேன். எனது குறி பொய்க்காது. உலகத்திலுள்ள எல்லாத் தேசங்களிலும் என் குறி கைகண்டது. இதனைக் கைலைமலையில் வாழ்கின்ற சிவனுடைய பிள்ளைகளாகிய வெள்ளைப்பிள்ளையாரும், வேலவரும் அறிவார்கள்."

ஒரு சிரங்கை நெல்லை எடுத்து அதனை இரண்டிரண்டாக எண்ணினள்; மீதி ஒன்று இருந்தது. அதுவே ஒற்றைப்படத்தொட்டது. இதற்குக் 'கட்டிப் பார்த்தல்' என்று பெயர். இப்படிப் பார்த்துக் கூறுபவர் 'கட்டுவிச்சியர்' எனப்படுவர். இதனைக் குறுந்தொகை 23ம் பாட்டால் அறியலாம். "இந்நாழி நெல்லையு முக்கூறு செய்தோர் கூற்றை யிரட்டைபட எண்ணினபோ தொற்றை பட்டதம்மே" (மதுரை மீனுட்சியம்மை குறம் – 26). மேலும், "உதயமான சுளகுநெல்லு மொற்றைபட்டதாதலால்" (அருணைக்கலம்பகம்—50) என்பதால் அறியலாம்.

ஆணையிட்டுச் சொல்லுதல் குறத்தியர்க்கு மிகச்சாதாரணம். 'காசியுள', என்றவிடத்து மூலம் சற்று சிதைந்துளது.

குறத்தி தன் குலப்பெருமை கூறுகிருள்

13. வள்ளியம்மை தனைக்கேட்க மகதேவ ருமையும்
வந்துவந்து நடந்ததெங்கள் வாசலில்கா ணம்மே.
பிள்ளையுட பிள்ளைகளை ஒருபுறத்தி லிடுக்கி,
பெண்களுட பிள்ளைகளை ஒருபுறத்தி லிடுக்கி,
அள்ளியவர் அணைந்தயெச்சி லத்தனையு முண்டு,
அவர்கள்வைய யிவர்கள்வைய அடிபடுமே யம்மே.
வெள்ளிமலை தனிலுறையுஞ் சிவமகனர் தஞ்சை
வெள்ளைப்பிள்ளை யார்தாளை வேண்டுவங்கா ணம்மே,

(இ-ள்) "முருகனுக்கு மணம்புரிவிக்க வள்ளியம்மையைப் பெண்கேட்கப் பரமசிவனும், பார்வதியும், எங்கள் வாசலில் வந்து வந்து பல முறை கேட்டுச் சென்றூர்கள். (நாங்கள் தரமறுத்தோம்) அப்படிப்பட்ட வாசலில் நான் எனது பிள்ளை வயிற்றுப் (பேரப்) பிள்ளைகளை ஒரு பக்கத்தில் அணைத்துக்கொண்டு

பெண் வயிற்றுப்பிள்ளைகளை ஒருபக்கத்தில் அணைத்துக்கொண்டு, அப்பிள்ளைகள் அளைந்து எஞ்சிய எச்சில் சோற்றையுண்டு இருப்பேன். இதற்காக எனது பிள்ளைகளும், பெண்களும், என்னை வைவதால் என்பெயர் அடிபடும். இவைகளுக்காக நாங்கள் எல்லோருமே வெள்ளிமலையில் வாழ்கின்ற சிவனார் மகனாகிய தஞ்சை வெள்ளைப்பிள்ளையாரின் திருவடிகளை வணங்குவோம்."

"பெண்கேட்கப் பன்முறை நடப்பார்கள் பிள்ளைகளைப் பெற்றவர்கள்." இவ்வழக்குப்படி நடந்ததாகக் கூறுகிறாள் குறத்தி. மேலும் தன்குடும்பத்தில் மகன், மருமகள், மகள், மருமகன் பேரப்பிள்ளைகள் எல்லோரும் மனைநிறைய வாழ்தலைக் கூறுகிறாள். பேரப்பிள்ளைகளுக்குச் சலுகை கொடுப்பது பாட்டிமார்கள் இயல்பு. அது காரணமாக மகன், மகள் முதலானவர்களிடம் வசவு பெறுவதும் வழக்கம். இது இங்கு கூறவேண்டிய காரணமென்னவெனில் "நான் (வயது சென்ற) அனுபவமிக்கவள், எனது குறி பொய்க்காது" என்பதுவே. தனது குறியினை நம்பவைக்க இந்த அநுபவத்தைக் கூறினாள் போலும்.

குறத்தி மெய்க்குறி கூறல்

14. வாளின்விழி தொட்டாலும் மக்களின்று வருவர்.
மங்கிலியந் தொட்டாலுன் பங்கிலவர் வருவர்.
தாளிணைகள் தொட்டாலுந் தாய்தகப்பன் வருவர்.
தளிர்க்கையது தொட்டாலுந் தம்பிமார் வருவர்.
தோளிணைகள் தொட்டாலுந் தோழிமார் வருவர்.
தொந்திதொடி லந்திக்குச் சம்பந்திமார் வருவர்.
வேளிரதி யாயிதனில் ஒன்றுதொடில் தஞ்சை,
வெள்ளைப்பிள்ளை யார்வந்து மேவுகுறி சொல்வர்.

(இ–ள்) "அம்மே! உனது வாள்போன்ற கண்களைத் தொட்டால் (உனக்குக்) குழந்தைகள் தோன்றுவார்கள். உனது தாலியைத்தொட்டால் உனது கணவர் பக்கத்தில் வருவார். கால்களைத் தொட்டால் உன் தாய் தந்தையர் வருவார். தளிர்போன்ற கைகளைத்தொட்டால் உனது தம்பிமார் வருவார்கள். தோள்களைத் தொட்டால் உனது தோழியர்கள் வருவார்கள். வயிற்றினைத் தொட்டால் இன்று மாலையில் உன் வீட்டுக்குச் சம்பந்திமார்கள் வருவார்கள். மன்மதனுடனிருக்கின்ற இரதி தேவியே! இவைகளில் ஏதேனும் ஒன்றைத் தொட்டால் தஞ்சை வெள்ளைப்பிள்ளையாரே வந்து உனக்குக் குறி சொல்லுவார்.

கண்ணைத் தொட்டால் (கண்மணிகளாகிய) பிள்ளைகள் வருவார் என்பது குறிபோலும். இவ்வாறே பிறவுமாகும். இது மெய்தொட்டுக்குறி சொல்லுகிற வழக்கம். உடம்பிலுள்ள அடையாளங்கண்டு குறி கூறியதாக சரபேந்திர பூபாலகுறவஞ்சி, பாட்டு 51; 9–12 கூறுகிறது.

குறத்தி தலைவியின் குலதெய்வங்களைக் கூறுகிறாள்

15. மங்கிலியக் கழுத்திதுகில் கேட்குறா ளம்மே!
மனையில்வாழ் தெய்வமொன்று தோணுதடி யம்மே!
எங்கள்குல தெய்வமொன்று பொங்கலென்கு தம்மே!
ஊத்துக்காட் டம்மைபலி யுண்டென்கு தம்மே!
திங்களணி யீசர்பலி வருந்தறா ரம்மே!
செத்தவளா யொருத்திஎதிர் நிற்கின்றா ளம்மே!
தங்கையரே! பிள்ளையுச்சிக் கெண்ணைவார் துணிதா
தஞ்சைவெள்ளைப் பிள்ளையார் தழுவுகுறி சொல்வர்.

(இ-ள்) "அம்மே! உன் வீட்டுத்தெய்வமாகிய மங்கிலியக்காரி தனக்குச் சேலை கேட்கிறாள். அப்படிப்பட்ட பெண் தெய்வம் உன் வீட்டுத் தெய்வமாகத் தோன்றுகிறது. எங்கள் குலதெய்வமாகிய முருகன்கூட இவ்வீட்டிலிருந்து கொண்டு தனக்குப் பொங்கல் வேண்டுமென்று கேட்கிறான். ஊத்துக்காட்டு மாரியம்மை 'எனக்கும் இவ்வீட்டில் ஒரு பங்கு உண்டு' என்று கேட்கிறாள். திங்களையணிந்த சிவபெருமான் தனக்கும் பூசை வேண்டுமென்று கேட்கிறார். உன் வீட்டில் இறந்துபோன சுமங்கிலி ஒருத்தி எதிரே நிற்கிறாள். என் தங்கை போன்றவளே! என் பிள்ளையுச்சிக்கெண்ணை ஊற்று; துணி கொடு. தஞ்சையிலேயுள்ள வெள்ளைப்பிள்ளையார் உனக்குத் தழுவுகுறி சொல்லுவார்.

முன் பாட்டில் மெய்க்குறி சொல்ல ஏதேனும் ஒன்றைத் தொடும்படி வேண்டினாள். அதில் அவள் தாலியையே தொட்டிருத்தல் வேண்டும். அதனால் அதுகொண்டு குறத்தி வீட்டுத் தெய்வங்களைக் கூறுகிறாள். 'வீட்டில் உள்ள தெய்வங்களை மறந்து அவைகளுக்குப் பூசனை முதலானவைகள் செய்யாத காரணத்தால்தான் இக்குறை ஏற்பட்டது' என்பதனை மறைமுகமாகக் கூறுகிறாள். வீட்டுத் தெய்வங்கள் பூவாடைக்காரி, தாலிக்கழுத்தி, மகமாயி முதலியவர்கள். இவர்களுக்குப் பட்டாடை வைத்துப் படைத்தல் மரபு. அதனைத் துகில் கேட்டதாகக் கூறினள் போலும். "வீட்டில் தாலிக்கழுத்தோடு இறந்தவர், வீட்டில் தெய்வமாக நின்று காப்பர்" என்று சொல்வர். அதனையும் குறத்தி சொல்லுகிறாள்.

'பிள்ளையுச்சிக் கெண்ணைவார் துணிதா' என்று கூறும் மரபு, "பிள்ளை தலைக் கொருகரண்டி யெண்ணெ யூற்றிடம்மே" (சரபேந்திர குறவஞ்சி) (பாட்டு 50; -2) என்றதாலறியலாம். 'தழுவு குறி' என்றது பிரிந்த கணவன் கூடுகின்ற குறியாகும்.

विनोदे स्तोमशब्दस्तु शय्यायां तूपदानके।
दुर्गन्धे च समूहे च मृदुले मधुरेऽपि च ॥ ६० ॥

निगमः पट्टणे मार्गे विपण्यामपि निन्दने।
वेदेऽप्यरण्ये नैगस्तु वैश्ये नन्दीश्वरेऽपि च ॥ ६१ ॥

नरे नृपे जम्बुके च सर्पे रामो निगद्यते।
मूर्तित्रये शुके वृक्षभेदेऽपि च मनोहरे ॥ ६२ ॥

दमस्सात्विकभावे च विद्यायां याजकेऽपि च।
स्वभावे विनये चापि नेत्रकोणे निगद्यते ॥ ६३ ॥

भीष्मं भयेऽपीन्द्रिये च प्रज्ञायां कठिनेऽपि च।
मन्दे परुषवार्तायां गुल्मरोगे गृहेऽपि च ॥ ६४ ॥

शिरोजे पक्षिभेदे च वृक्षपादे च वर्षणे।
क्षमा भूम्यां मूलिकायामुपशान्ते हितेऽपि च ॥ ६५ ॥

कारणे सात्विके चापि ललामं ध्वजचिह्नयोः।
लोध्रे बिन्दौ मुखे श्रेष्ठे सूक्ष्मस्तु मदनेऽपि च ॥ ६६ ॥

शुक्तिभेदे सितेऽप्यल्पे प्रज्ञायां निर्मलेपि च।
प्रथमो ब्राह्मणे मन्त्रेऽप्युपदेशे क्रतौ भटे ॥ ६७ ॥

आदौ वामो मनोज्ञे च वृत्ते च मदनेऽपि च।
जीर्णचित्रे च जन्मे च दक्षिणेतरपार्श्वके ॥ ६८ ॥

अधमस्त्वल्पके मूले मन्दे भिक्षादिजीवने।
अधीनेऽपि च तारुण्ये तार्क्ष्यश्च गरुडेऽपि च ॥ ६९ ॥

मेषे पक्षिसमूहे च देवभेदे च वायसे।
लताभेदे हरिश्चापि चन्द्रे सूर्ये च घोटके ॥ ७० ॥
विष्णौ सिंहे सुरेन्द्रे च सूरिभिः परिकीर्तितः ॥

इति कविराक्षसप्रणीतषडर्थनिर्णयः समाप्तः ॥

शब्दचन्द्रिका

प्रथमः सर्गः

विद्यारण्यगुरून् सार्वभौमाद्यखिलसत्कवीन् ।
नमस्कृत्याथ बाणेन क्रियते शब्दचन्द्रिका ॥ १ ॥

स्वर्गे सारस्वतपुरी भोगभूमिस्तु सैरिकः ।
गीर्वाणनगरी वीरसाधारणपुरीति च ॥ २ ॥

निलिम्पा मरुतोऽमर्त्याः गुरुशिष्या दिवौकसः ।
इन्द्रो विद्याधरस्वामी परमन्युर्युधिष्ठिरः ॥ ३ ॥

विभीषणश्चित्ररथश्शतमन्युर्महाविभुः ।
तस्य प्रिया तु पौलोमी युगावर्ता पुलोमजा ॥ ४ ॥

सुतस्तस्य जयन्तः स्याज्जयोऽपि च निगद्यते ।
अस्योद्यानं नन्दनं स्यात्प्रासादस्तु पताकिका ॥ ५ ॥

अग्निर्वायुसखश्श्रीमान् प्रभावान्मेषवाहनः ।
हिरण्यरेतास्सर्वाशः कपर्दी तिलकः कविः ॥ ६ ॥

तस्य प्रिया स्वधा स्वाहा पत्तनन्तु हविष्मती ।
यमस्तु धर्मराजः स्यात्सावित्रेयः परेतराट् ॥ ७ ॥

आषाढभूतिस्सर्वघ्नो दण्डकस्सात्त्विकप्रियः ।
तस्य जाया सत्यवती धूमोर्णेति निगद्यते ॥ ८ ॥

नैर्ऋती राक्षसस्वामी कोणपः कुणपायुधः ।
ज्येष्ठास्यात्तस्य जाया तु सुतस्तस्य त्वभाग्यकः ॥ ९ ॥

वरुणस्सारथिस्स्वामी नदीनाथः प्रजापतिः ।
समुद्रवल्लभश्शंभुः पाशभृत्सर्वतोमुखः ॥ १० ॥

गौरी तस्य प्रियायां स्यात्परिघा तस्य पत्तने।
वायुर्महाजवो गन्धवाहो गन्धवतीप्रियः ॥ ११ ॥

भूतावासो घनारातिर्ज्जगत्प्राणस्समीरणः।
कुबेरः पद्मिनीकान्तो राजराजो धनाधिपः ॥ १२ ॥

कैलासनिलयो राजा किलासाधिपतिर्विभुः।
किलासमलकायां स्याद्वने चैत्ररथं स्मृतम् ॥ १३ ॥

मणिकर्णोऽस्य तनये नलकूबर इत्यपि।
ईशानः पार्वतीकान्तः कठोरस्त्रिपुरान्तकः ॥ १४ ॥

विश्वंभरः पुरारातिः कटाटीरो महानटः।
जटाटीकः कङ्कटिको जटाझाटो जटीविटः ॥ १५ ॥

सामिमूर्तिश्चन्द्रमौलिस्संधिचन्द्रकभाषणः।
शिवा भवानी रुद्राणी पार्वती भुवनेश्वरी ॥ १६ ॥

काली कोली कराली च लोकमाता मनोन्मणी।
प्रत्यूहाधिपतिश्शुक्रः विष्णुर्विघ्नेश्वरोऽपि च ॥ १७ ॥

लेखिनीरदनो वेदलेखकस्तु गणाधिपः।
कुमारः पार्वतीसूनुस्सेनानीरग्निभूर्गुहः ॥ १८ ॥

बाहुलेयश्शक्तिधरश्शूरः स्कन्दो बुधाधिपः।
विष्णुस्संकर्षणः कृष्णः पुरातनचिरन्तनौ ॥ १९ ॥

शतानन्दो मुरारातिः श्रीधरो यज्ञपूरुषः।
आदिदेवो हृषीकेशः केशवो माधवः स्वभूः ॥ २० ॥

महाराजश्चक्रवर्ती हरिश्शौरिस्सुरोत्तमः।
लक्ष्मीः पद्मालया पद्मा पद्माक्षा शुभवीक्षणा ॥ २१ ॥

चन्द्रा हिरण्मयी कान्ता कान्तकान्तारवासिनी।
मदनो मन्मथो वामो रामो रजकवाहनः ॥ २२ ॥

झषकेतुर्जराभीरुः कामः पञ्चशरः स्मरः ।
ब्रह्मात्मभूः पत्रिरथः पद्मभूः पङ्कजासनः ॥ २३ ॥

शम्भुस्स्वयंभूर्विश्वात्मा लोकपालस्त्रिलोकभृत् ।
सत्यावासस्सुरानन्दो रुक्मगर्भः प्रजापतिः ॥ २४ ॥

वेदगर्भो ललाटांकलेखकः पूर्वजोग्रजः ।
ब्राह्मी वराङ्गना भाषा वाग्देवी विश्वमातृका ॥ २५ ॥

भारती वाचका वाणी गीर्देवी परमेश्वरी ।
आजिर्मनोजवो धीरो नारदः कलहाशनः ॥ २६ ॥

इति बाणकविविरचितायां शब्दचन्द्रिकायां
स्वर्गादिलोकपालाधिकारः प्रथमस्सर्गः ॥

द्वितीयः सर्गः

आकाशश्शब्दगुणकं मेघद्वारं महापथम् ।
तारापथोऽन्तरिक्षं च निराधारमितीरितम् ॥ १ ॥

सूर्यो भानुर्दिवाधीशः पद्मबन्धुर्विरोचनः ।
वेदमूर्तिर्विश्वकर्मा कोकबन्धुर्नभश्चरः ॥ २ ॥

विश्वमूर्तिर्लोकसाक्षी दीप्तमूर्तिरनन्तगः ।
नीरदो नीरदकरो हेलिरद्रिः प्रतापनः ॥ ३ ॥

भानोः करो मरीचिः स्यान्मयूखो विश्वविक्रमः ।
मेघसूश्च जलग्राही वेदरश्मिः घृणिः करः ॥ ४ ॥

छाया कान्तिमती संज्ञा गतानुगतिकापि च ।
सुतस्तस्यास्तु रेवन्तोप्यरुणः सव्यसारथिः ॥ ५ ॥

चन्द्रश्शशांकश्शुभ्रांशुर्दिवाभीरुर्निशाटनः ।
सर्वभद्रः काण्डनूनं समुद्रनवनीतकम् ॥ ६ ॥

उडुराजो निशाराजः कमलीतं निगद्यते ।
चन्द्रपादस्तु संवालः प्रवाल इति कथ्यते ॥ ७ ॥

चन्द्रिका गोमती ज्योत्स्ना बण्णला पथिकानलः ।
नक्षत्रं रात्रिजं धिष्ण्यं तारकं रकमित्यपि ।
आकाशकुसुमं बिन्दुर्भानुभीरुर्निगद्यते ॥ ८ ॥

रात्रिर्निशीथिनी काली तमा दीपवती मतिः ।
नभच्छायावती वह्नितेजोवृद्धिकरीति च ॥ ९ ॥

ज्योत्स्नावती चन्द्रवती ज्योत्स्नी चन्द्रिकयान्विता ।
अभ्रं मेघो वारिवाहो जलविड्धूमयोनयः ॥ १० ॥

ज्योतिर्गर्भस्सदागामी कृतज्ञः प्रलयाधिपः ।
तस्य भेदस्तु संवर्त इलावर्तस्तु पुष्करः ॥ ११ ॥

आवर्तनः पुष्पकश्च पर्जन्य इति कथ्यते ।
वृष्टिश्च वर्षणं वर्षं प्रावृषः परिकीर्तितः ॥ १२ ॥

धारासारो धोरणिश्च सीकरोंबुकणः स्मृतः ।
घनोपलस्तु पार्जन्यः करका करकोऽपि च ॥ १३ ॥

तटित्सौदामनी विद्युत्कलावत्युन्नतप्रभा ।
क्षणज्वालाग्रसुषमा केतकीसुमरञ्जना ॥ १४ ॥

निर्घोषो गर्जनं गर्जा घनघोष इतीर्यते ।
हिमस्तुषारः पृषतः संवालज इतीर्यते ॥ १५ ॥

इति बाणकविविरचितायां शब्दचन्द्रिकाया-
मन्तरिक्षाधिकारो द्वितीयस्सर्गः ॥

तृतीयः सर्गः

भूमिर्वसुन्धरा श्यामा जगती धरणी धरा ।
इला द्वीपवतीभूषागिरिश्रोण्यब्धिमेखला ॥ १ ॥

वर्तुलं चक्रवालं च चक्रछत्रं च मण्डलम् ।
आर्यावर्त इलावर्तः पुण्यभूमिरितीर्यते ॥ २ ॥

माध्यमो मध्यदेशश्च स्यादासेतुहिमाचलम् ।
भारतं स्याद्धैमवतमाभूभृद्राजलावणम् ॥ ३ ॥

वर्षाणि भारतादीनि नवोक्तानि मनीषिभिः ।
विन्ध्याद्रेर्दक्षिणो देशो दक्षिणापथसंज्ञितः ॥ ४ ॥

अद्रिः कुत्कीलकश्शंभुर्गिरिराभूतलोचनः ।
दुर्गमस्सानुमान् शैलो विपक्षो धरणीधरः ॥ ५ ॥

पाषाणः प्रस्तरः कल्यश्शिला ग्रावा कुडुङ्गकः ।
मणिर्मृज्जोटङ्कभीरुरग्निगर्भ इतीरितः ॥ ६ ॥

सूर्योपलश्चन्द्रशिला स्फटिकोर्को निगद्यते ।
अयोमणिस्त्वयस्कान्ते कान्तं तीक्ष्णमितीरितम् ॥ ७ ॥

वृत्तं श्वेतं शुक्तशिला सुवर्णं हरितालके ।
गन्धके गन्धिलं त्वाशारसग्राहि हिरण्यजम् ॥ ८ ॥

रसस्तु पारदो राजा महाजीवो महादनः ।
तद्भेदे दरदो हिंगी शिखाग्नी रसजिह्विका ॥ ९ ॥

स्वर्णं दाक्षायणं भर्मं रुक्मं कार्तस्वरं घनम् ।
कल्याणं रत्नगर्भं च द्राविणं राजभूषणम् ॥ १० ॥

एकवर्णे तु शकलं द्विवर्णे त्वटकं मतम् ।
वसु त्रिवर्णे कथितं चतुर्वर्णे पणं स्मृतम् ॥ ११ ॥

पञ्चवर्णे सुवर्णं स्यात् षड्वर्णे टङ्कमित्यपि ।
दाक्षायणं सप्तवर्णेऽप्यष्टवर्णे तु भार्गवम् ॥ १२ ॥

नववर्णे तु कल्याणं तङ्गं षोडशवर्णके ।
शतवर्णे तु मेरुस्स्यात्सुमेरुस्स्यात्सहस्रके ॥ १३ ॥

अयुते सूर्यकं चैव सूर्यं निबसमुद्भवम् ।
रजतं चन्द्रकं चान्द्रं कैलासनगसंभवम् ॥ १४ ॥

दुर्वर्णं तारकं तारं वैरिकं पादभूषणम् ।
शुक्तिस्मृतं वज्रगर्भं चन्द्रभीरु निगद्यते ॥ १५ ॥

रसबीजं सुवर्णाद्यं वेदाहं रससंभवम् ।
ताम्रं काश्मीरकं द्रोणं प्लवगास्यं तु मर्कटम् ॥ १६ ॥

कांस्यं घण्टास्वनं ज्ञेयं रीतिः स्यात्पीतलोहकम् ।
रङ्गं सीसं च योगेष्टं त्रपु स्यान्मुग्धभूषणम् ॥ १७ ॥

रत्नं मणौ चाकचक्यं चञ्चलकः परिकीर्तितः ।
मौक्तिकं शौक्तिकेयं स्याच्छुक्तिसंभवमौक्तिके ॥ १८ ॥

मेघोदरसमुद्भूते सौदामन्यभिधीयते ।
शुक्तिं विना नदीनाथे यद्भवेन्मौक्तिकं स्मृतम् ॥ १९ ॥

तत्तु चिन्तामणिर्वेणौ संभवे वैणवं स्मृतम् ।
गजकुंभतलोद्भूते त्वणिराणिरितीर्यते ॥ २० ॥

दन्तिदन्तोद्भवे दन्त्यमैक्षवं चेक्षुसंभवम् ।
पद्मरागे रविमणिः शृङ्गारी हारनायकः ॥ २१ ॥

सलोहितो जातरङ्गः कुरुविन्दोऽतिलोहितः ।
सौगन्धिको मरालः स्यान्नीलगन्धी तु धूमलः ॥ २२ ॥

पक्कदाडिमबीजाभं माणिक्यं कूटमित्यपि ।
तत्तु पल्लवरागः स्यात्पल्लवेन समप्रभम् ॥ २३ ॥

महेन्द्रनीलरत्नं तु पारावत इतीर्यते ।
पक्षिकं पेशलं गाढं गारुत्मतमितीर्यते ॥ २४ ॥

